**வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், வேலூர்**

**ந.க.எண்.8777/ஈ3/2018, நாள். .03.2019**

| | |
|---|---|
| பொருள் : | பள்ளிக்கல்வி – விலையில்லா மடிக்கணினி – 2017-18ஆம் கல்வியாண்டு 12ஆம் வகுப்பு மாணவர்கள் – 2018–19ஆம் கல்வியாண்டு 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் – அனைத்து பாடங்களிலும் தேர்வுக்கு வராத மாணவர்களை ERP Entry இல் நீக்குதல் – சார்பு. |
| பார்வை : | 1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.771/வி2/இ2/2018, நாள்.14.03.2019.<br>2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.771/வி2/இ2/2018, நாள்.22.03.2019. |

********

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகளின்படி 2017–18 ஆம் கல்வியாண்டு 12ஆம் வகுப்பு மாணவர்கள் மற்றும் 2018–19 கல்வி ஆண்டில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் விவரம் விலையில்லா மடிக்கணினி வழங்க ஏதுவாக எல்காட் இணையத்தில் ERP Entry Nomnal Roll இல் உள்ளபடி முழுவதுமாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டது.

பார்வை 2இல் காணும் செயல்முறைகளின்படி தற்போது 2018–2019ஆம் கல்வியாண்டு 11 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வுகள் முடிவடைந்துவிட்டதால் **அனைத்து பாடத்திலும் தேர்வுக்கு வராத 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின்** பெயரினை ERP Entry இல் நீக்கம் செய்து விலையில்லா மடிக்கணினி பெற தகுதியுடைய மாணவர்களின் எண்ணிக்கையை இணைப்பில் உள்ள படிவத்தில் பூர்த்தி செய்து ஈ3 பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

22/03

இணைப்பு: படிவம்
2) JD (voc) Proceedings

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்,
அரசு /அரசு உதவிபெறும் மேல் நிலைப்பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்
மாவட்டக்கல்வி அலுவலர்கள்.
வேலூர், இராணிப்பேட்டை, அரக்கோணம், திருப்பத்தூர், வாணியம்பாடி (உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது).

dts

படிவம்

| ~~எண்~~ விவரம் | பள்ளியின் பெயர் | 2017–18( +2 பயின்ற மாணாக்கர்கள் | 2018–19 (+1 பயிலும் மாணாக்கர்கள்) | 2018–19 (+2 பயிலும் மாணாக்கர்கள்) |
|---|---|---|---|---|
| As per Nominal Roll மாணாக்கர்களின் எண்ணிக்கை | | | | |
| தேர்வுக்கு வராத மாணாக்கர்களின் எண்ணிக்கை | | | | |
| மடிக்கணினி பெற தகுதியுடைய மாணாக்கர்களின் எண்ணிக்கை | | | | |

தலைமையாசிரியர் கையொப்பம்

22/03

① Page E-Mail 22/03/19 5.04 P.M

/மின்னஞ்சல்/

**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகள்**
**சென்னை–600 006.**

ந.க.எண்: 771 / வி2 / இ2 / 2018 நாள் : 22.03.2019

பொருள் பள்ளிக்கல்வி – விலையில்லா மடிக்கணினி – 2017–18 ம் கல்வியாண்டு 12 ம் வகுப்பு மாணவர்கள் – 2018–19 ம் கல்வியாண்டு 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்கள் – அனைத்து பாடங்களிலும் தேர்வுக்கு வராத மாணவர்களை ERP Entry ல் நீக்குதல் – சார்பு.

பார்வை 1. சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கடித எண்.793/Sch-1/2018-2, நாள்.04.03.2019.

2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 771/வி2/இ2/2018. நாள்.14.03.2019.

பார்வை 2ல் காணும் கடிதத்தின்படி 2017–18ம் கல்வியாண்டு 12ம் வகுப்பு மாணவர்கள், 2018–2019 ஆம் கல்வியாண்டு 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்க பள்ளிகளில் எண்ணிக்கையை உறுதி செய்ய அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

தற்சமயம் 2018–19ம் கல்வியாண்டு 12ம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்வு முடிந்துவிட்ட நிலையில் அனைத்து பாடத்திலும் தேர்வுக்கு வராத மாணவர்களின் பெயரினை ERP Entry ல் நீக்கவும், அதேபோல் 2018–19ம் கல்வியாண்டு 11ம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்வு முடிந்தவுடன் அவ்வாறே வராத மாணவர்களின் பெயரினை ERP Entry ல் நீக்கம் செய்து, பார்வை 2ல் கண்ட கடிதத்தில் இணைக்கப்பட்ட படிவத்தில் விலையில்லா மடிக்கணினி பெற தகுதியுடைய மாணவர்களின் எண்ணிக்கையை உறுதி செய்து அனுப்புமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

22/3/19

இணை இயக்குநர் (தொழிற்கல்வி)

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

22/3/19

நகல்
1. இயக்குநர், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை, சென்னை–9 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. மேலாண்மை இயக்குநர், எல்காட் நிறுவனம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.